தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-5.

மலர் 3 | சென்னை | 26—1—57 | சனிக்கிழமை | இதழ் 21

நேரு வருகிறார்! நேரு வருகிறார்!!

பண்டித நேரு வருகிறார்! தமிழ்நாட்டு மக்கள் துயர்ப்பட்டுத் தொல்லைப்பட்ட போது, தன் கண்களை மூடிக்கொண்டிருந்த 'கருணை மன்னர்' வருகிறார். தமிழ் மக்கள் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நேரத்தில் வெளிநாட்டுக்கு உல்லாசப் பயணம் செய்துகொண்டிருந்த 'உதார புருஷர்' தமிழ்நாட்டுக்கு வருகை புரிகிறார். அரியலூர் ரயில் விபத்தில் அநேக மக்கள் மாண்டுபோன நேரத்தில் ஆறுதல் சொல்லக்கூட வராத 'குணக் குன்று' இப்போது தென்னகத்தைத் தேடி வருகிறார்.

அவரது வருகை நாட்டுமக்களின் நலிவைப் போக்குவதற்கா? இல்லை!

வெள்ளத்தில் திண்டாடி வாழ்விழந்த மக்களின் அல்லலைப் போக்குவதற்கா? இல்லை, யில்லை!

ரயில் விபத்திலே சிக்கிச் சீரழிந்துபோன மக்களின் உறவினர்களைக் கண்டு தனது வருத்தத்தைத் தெரிவிப்பதற்கா? அதற்கும் இல்லை!

பின் எதற்காக வருகிறார்? என்ன அவ்வளவு அவசரம் அவரது வருகைக்கு? வரப்போகும் பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியை வெற்றி பெறச் செய்வதற்கு மக்களிடம் 'ஓட்' கேட்க வருகிறார்.

தம்மைப் பொம்மையாக்கி, இங்குள்ளவர்கள் தங்களுக்கு 'ஓட்' தேட முயற்சிக்கும் செயலுக்கு உதவி செய்வதற்காக ஓடோடி வருகிறார். அவர் ஆடாவிட்டாலும் அவரது சதை ஆடுகிறது இந்த விஷயத்தில். "வாக்காளர்களே! இந்தியாவை மேலும் பலப்படுத்துவதிலும், வளப்படுத்துவதிலும் காங்கிரஸ் கட்சி மேற்கொண்டிருக்கிற மகத்தான பணிகளை எண்ணிப்பாருங்கள்! உங்கள் மனச்சாட்சிப்படி ஓட் அளியுங்கள்! அதைவிடுத்து, 'நேரு'வுக்காக ஓட் அளிக்காதீர்கள்" என்று பம்பாயிலே கேட்டுக்கொண்ட நேரு, அதை உடனே மறந்து சென்னைக்கு வருகிறார் 'ஓட்' கேட்க! சென்னைக் காங்கிரஸ்காரர்களுக்கு மக்களிடம் சிபாரிசு செய்ய வருகிறார்; வேடிக்கை!

நாட்டிலே புயல் செய்த கொடுமையால் நாதியற்றவர்களாக மாறியவர்கள் தொகை ஏராளம். வெள்ளப் பெருக்கினால் வீடும் வாசலும் இழந்து, வேதனைப்பட்டு, பஞ்சைகளாய், பராரிகளாய் ஆன மக்கள் தொகை மிக அதிகம். அதையெல்லாம் மறந்துவிட்டு, இப்போது எந்த உள்ளத்தோடு- எந்த முகத்தோடு மக்களிடம் வருகிறார் நேரு? தமிழகத்து மக்களின் எல்லாக் கோரிக்கைக்கும் பொறுப்பற்ற முறையிலே நடந்துகொள்பவர் ஒருவர் உண்டென்றால் அவர் நேருவாகத்தான் இருக்கமுடியும்!

பீகாரிலே வெள்ளம் என்றதும் ஓடோடிப் போனவர், அஸ்ஸாமிலே புயலென்றதும் அவசரமாக அங்கே சென்றவர் - தென்னகத்தில் புயலால் சேதம் ஏற்பட்டதைப் பார்க்க வரவில்லை. சேதத்தைத் தீர்க்க வரவில்லை. இப்போது அதை மறந்துவிட்டவராகிவிட்டார். மக்களை மறந்துவிட்டு, தேர்தலின்போது அவர்களை நினைவில் வைத்துக்கொண்டு வருவது காங்கிரஸ் கட்சியின் சாதாரணத் தொண்டனுக்கும் சரி, தலைமைப் பீடத்தில் இருப்பவர்களுக்கும் சரி, கைவந்த பழக்கம் என்பதை நேருவின் வருகை நன்றாக நிரூபிக்கிறது. ஒரு உண்மையைச் சொல்லப்போனால், காங்கிரஸ்காரர்கள் மக்கள் சக்தியை உணரவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மக்கள் ஏமாளிகள் என்ற எண்ணம் அவர்களின் நெஞ்சிலே இழையோடி விட்டிருக்கிற காரணத்தால்தான் தப்புக்கணக்குப் போடுகிறார்கள், தவறான வழியில் செல்கிறார்கள். சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; பலரைப் பலகாலம் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்றமுடியாது என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இந்த மறதியாளரின் கூட்டத்திற்குத் தலைமைவகிக்கிறார் நேரு.

சாதாரணமாக, ஒருவர் வீட்டு இழவுக்கு வராத ஓர் உறவினரைக் கண்டாலே, இழவு வீட்டுக்காரருக்கும், அவர்தம் உறவினர்களுக்கும் மேற்படி உறவினரைப் பிடிப்பதில்லை. முகம் கொடுத்துப் பேசுவதில்லை. இன்னும் சொல்லப்போனால் மதிப்பதுகூட இல்லை. திருமண விழாவிற்குக் கூட வராமலிருக்கலாம், குற்றமில்லை. ஆனால் ஒருவர் இறந்துவிட்டாரென்றால், அந்தச் சமயத்தில் பழகியவர்கள், வராமலிருப்பது முறையல்ல, பண்பாடல்ல. இதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். நூற்றுக்கணக்கான மக்களை ரயில் விபத்தில் பலி கொடுத்துவிட்டு,- இருக்கவும் முடியாமல், இறக்கவும் முடியாமல் திண்டாடும் உறவினர்களைப் பார்த்துவிட்டு,- துடித்து, துக்கித்து, சித்திரவதைப் பட்டு, அழுது வாடிய தமிழ்மக்களைப் பார்க்க வராத நேரு, இப்போது, காங்கிரஸ் வெற்றிபெற வேண்டும் என்ற 'சுயநல' எண்ணங்கொண்டு வருகிறார். மக்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்; இனியும் ஏமாற்று வேலைகள் நடக்காது! "செல்காலமெல்லாம் செலுத்தினீர்கள்! இனிமேல் கல்லாக வேண்டியதுதான்" என்பதைக் கட்டாயம் உணர்த்தத்தான் போகிறார்கள். வருகிற 'பெரிய மனிதர்' கட்டாயம் உணரத்தான் போகிறார். வரட்டும்! வரட்டும்! மக்கள் பதில் கூறுவார்கள்.

—தமிழ்[illegible]

தமிழ் நாட்டில்

புயலால் — அழிவு அழுகுரல்

ரயில் விபத்தால் — பிணமலை ரத்தவெள்ளம்

ஆறுதல் அளிக்க நேரு பண்டிதர்
வரவில்லை!

ஓட்டுக் கேட்க மட்டும் ஓடோடி
வருகிறார்!!

நல்லோரே கூறுங்கள் —
நீதி இதுதானா?

—தி. மு. க.

லெனினைத் 'தூக்கி'லிடும் கம்யூனிஸ்டுகள்!

சுதந்திரம்!

சமத்துவம்!

சகோதரத்துவம்!

இந்த மூன்றும் ஜனநாயக உலகத்தின் 'தாரக மந்திரம்'. அதேபோல,

சுருங்கச் சொல்!

விளங்கவை!

ஒளிவு மறைவின்றி உண்மை பேசு!

என்பது கம்யூனிச இயக்கத்தின் ஆதிகால அடைப்படைத் தத்துவமாக இருந்திருக்கிறது.

வெறும் உணர்ச்சிக் குமுறலையும், உற்சாகத்தையும் மட்டுமே கொண்டிருந்தால், சோஷலிச சமுதாயத்தை நிர்மாணித்துவிட முடியாது என்பது, மாவீரன் லெனின் கடைப்பிடித்த மகத்தான 'கோட்பாடு'! இந்தக் கோட்பாட்டை அவன் எவ்வளவு தூரம் விடாப்பிடியாக அனுசரித்தான் என்பது ஓர் 'உலக மாகாவியம்'! யாருக்கும் எப்போதும் விட்டுக்கொடுக்காத அந்த 'மகா முரடன்' ஜெர்மானியர்கள் விதித்த கேவலமான - கிழ்த்தர 'ராஜ்ய அபிலாஷை'களை உள்ளடக்கிய போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஒரு பேச்சும் பேசாமல் ஒப்புக்கொண்டான். காரணம், அவன் கனவு உலகத்தில் மட்டும் சஞ்சரித்துக் கொண்டிருந்தவனல்ல; காரியத்திலும் விழிப்புடன் இருக்க நினைத்தவன். வெறும் உணர்ச்சியிலும் உற்சாகத்திலும் அவன் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தால் ஜெர்மானியரின் ஒப்பந்தத்தைச் சுக்கு நூருகக் கிழித்துப் போட்டிருப்பான். அதைப் படித்துப் பார்த்தால் எங்கே நாம் உணர்ச்சி வயப்பட்டுக் கிழித்தெறிந்து விடுவோமோ என்கிற அச்சத்தில், பக்கத்திலிருந்தவர் படித்துப் பார்த்து கையொப்பமிடும்படிச் சொன்னபோது, நான் கையொப்பமிட வேண்டும் என்று எதிர்பார்க்கிற அதே நேரத்தில் படித்துப் பார்க்கச் சொல்கிறீர்களே என்று சொன்னதாகவும் ஓர் 'கர்ண பரம்பரை' வரலாறு சொல்கிறது. உணர்ச்சியை அடக்கத் தெரிந்தவன் மட்டுமல்ல லெனின்-ஒழுக்கத்தையும் உயிரென ஓம்பப் பிரசாரம் செய்தவன். முன்னுக்குப் பின் முரண்படாததே ஓர் அரசியல்வாதிக்குத் தேவையான ஒழுக்கமென்று அவன் சாகும்வரை கரடியாய்க் கத்திச் செத்தான்.

அந்த நல்ல உள்ளத்தின் வேலைகளைத் தொடர்ந்து செய்ய முன்வந்த 'கத்தாழைமட்டை'கள் அனைத்தும், அவன் பெயரை எவ்வளவு தூரம் கெடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் கெடுத்துத் தொலைத்துக் குட்டிச்சுவராக்கி விட்டன. அவன்-லெனின் ஒரு நாட்டின் 'தலைவிதி'யையே தன் கைக்குள் அடக்கிவைத்திருந்த நேரத்திலும் - மற்ற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் அநேக நூற்றுண்டுகளின் வளர்ச்சியில் ரஷ்யா பின்தங்கிக் கிடந்த நேரத்திலும்,

சுருங்கச் சொல்!

விளங்க வை!

ஒளிவு மறைவின்றி உண்மையே பேசு!

என்று விடாப்பிடியாக 'ஒற்றைக்காலில்' நின்றான். ஆனால், அவன் வழிவந்த தமிழகத்தின் கம்யூனிஸ்டுகள், இந்த மூன்றையும் கேவலம் 55 சட்டசபை உறுப்பினர் பதவிக்கு ஏலம் போடத் துணிந்துவிட்டனர்.

அவர்களுக்கு கம்யூனிசம் பெரிதல்ல, மக்கள் சுபிட்சமும் பெரிதல்ல. எப்போதும் ஓர் குழப்ப நிலை இருந்து வருவதைத்தான் விரும்புகின்றனர். தெளிவான அரசியலோ, திட்டமான கொள்கைகளோ, தேய்ந்த பாட்டையில் மக்கள் வாழ்வு வண்டியை ஓட்டிச் செல்வதிலோ அவர்கள் ஒருபோதும் கவனஞ் செலுத்தியதில்லை. மாருக இவைகளுக்கு மாபெரும் எதிரிகளாகவே இருந்துவருகின்றனர். காங்கிரஸ் கட்சியின் சர்வாதிகாரத்தையும், அதன் ஜனவிரோதக் கொள்கைகளையும் கண்டிக்கும் கம்யூனிஸ்டுகள், அதை எதிர்க்க, பரவலான முறையில் ஜனநாயக வளர்ச்சியுடன் மக்களும் - அந்த அந்த மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் இயக்கங்களும் 'வரிந்துகட்டி' முன் வரும்போது 'ஆஹா ஊஹூ' என்று கொக்கரிப்பர். குறிப்பாக, நடந்த ஐந்தாண்டுக் காலத்திலே அவர்களின் சாதனைக்கெல்லாம், ரஷ்ய அரசாங்கத்திற்கு "உத்தியோகப் பற்றற்ற" அம்பாசதாரர்களாக வேலை பார்த்ததைத் தவிர வேறு என்ன உருப்படியான காரியங்கள் இயற்றினர்கள்? விவசாயிகள் பிரச்னையை தேசியப் பிரச்னையாக்கிய பெருமை தங்களையே சாருமென்று கம்யூனிஸ்டுகள் மார்தட்டிக் கொள்கிருர்கள்—போகட்டும். ஆனால், விவசாயிகள் பிரச்னை தேசியப் பிரச்னையானபோது, விவசாயமும் தேசியப் பிரச்னையாக வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்ளவேண்டும் அல்லவா?

எங்கே ஆயிற்று? தெற்கே விவசாயிகள் பிரச்னையை 'முடுக்கி' விட்டு, குழம்பிய குட்டையில் 'கெண்டைமீன்' பிடிக்கப் பாடுபடும் கம்யூனிஸ்டுகள், விவசாயப் பிரச்னையும் தேசிய மயமாக வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்காமலிருப்பதேன்?

வடக்கே விவசாயிகள் பிரச்னை தேசிய ரீதியில் கவனிக்கப்படுகிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் விவசாயப் பிரச்னை அவசர அவசரமாக தேசியப் பிரச்னைக்குள்ளாக்கப் பட்டிருக்கிறது.

இராகுட் அணை

கோசி அணை

தாமோதர் அணை

பாக்ரா-நங்கல்

இவைகள் வடக்கே! அதாவது இந்த அணைகள் விவசாயத்தை தேசிய பிரச்னையாக்கியதற்கு அடையாளம்!

இங்கே?

"நம்முடைய விவசாயம் ஆரம்பகால நிலைமையிலேயே இருக்கிறது. அநேகமாக பருவ மழையையே நம்பியிருக்கும் நிலைமை. ஒரு ஏக்கருக்கு உற்பத்தி அளவு உலகத்திலேயே நம்முடைய நாட்டில் தான் குறைவு" (கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை **'ஜனசக்தி'** 10-1-57.)

தேர்தல் அறிக்கையிலேயே இதை ஒப்புக்கொண்டு, தஞ்சாவூரில் 'அதிக வாரம்' விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுத்ததாகப் பேசி மார்தட்டுவது பற்றி கம்யூனிஸ்டுகள் வெட்கப்பட வேண்டாமா?

அகப்பையில் கிடைப்பதை மட்டுமே 'சிண்டு முடித்து' பங்கு போட (அதுவும் சரியாகப் போடுகிருர்களா என்பது வேடிக்கையான சங்கதி) திடுமெனக் குதிக்கும் இந்தச் சூரர்கள், சட்டியில் முதலில் பண்டத்தை நிறையச் செய்வதற்கு என்ன வழி வகை செய்ய முனைந்தார்கள்?

'ஒரு ஏகருக்கு உற்பத்தி அளவு நம் நாட்டில்தான் மிகவும் குறைவு' என்று புள்ளி போட்டுக் காட்டும் பொருளாதார மேதைகள் உற்பத்தியை அதிகரிக்க என்ன செய்தார்கள்? உலகிலேயே மிகக் குறைந்த அளவு விளைச்சல் ஏகரில் கிடைப்பதைப் பங்கு போட வந்தவர்கள் அதையும் கவனிக்க வேண்டுமல்லவா?

தி. மு. கழகம் இதைக் கேட்கிறது-இதைச் செய்யவும் முடியும் என்று சொல்கிறது. அநேகமாக பருவ மழையையே நம்பியிருக்கும் நிலையில் நமது நாட்டு விவசாயம் பின்தங்கிக் கிடப்பதாக அங்கலாய்க்கும், 'காம்ரேட்'கள், பருவ மழையை எதிர்பார்க்காமல் விவசாயம் செய்வதற்கான வகைகளைத் துணிந்து கூறுதது ஏன்? கேளுங்கள் ஓட்டர் பெருமக்களே!

பருவ மழையை எதிர்பார்க்காமல் விவசாயம் நடத்துவதற்கு வடக்கே கட்டுகிருர்கள் மிகப் பெரிய அணைகளை! இங்கே? இதைக் கேட்பது பிரிவினை மனப்பான்மையா?

சட்டியில் இருப்பதற்காக இழுபறி நடத்திக்கொண்டிருக்கிறது கம்யூனிஸ்ட் கட்சி!

சட்டியை நிரம்பச் செய்வோம் என்று அனைவரையும் ஒத்துழைக்க வேண்டுகோள் விடுக்கிறது தி. மு. கழகம்!

விவசாயிகள் பிரச்னையை மட்டுமே சொல்லிச் சொல்லி வயிறு வளர்க்கிறது, கம்யூனிஸ்ட் கட்சி! விவசாயத்தையும் கொஞ்சம் வளர்ச்சியடையச் செய்வோமே-அதைத் தடுத்து நிற்பவர்களிடமிருந்து தூர விலகி நிற்போமே என்கிறது தி. மு. கழகம்!

இந்த இரண்டில் எது சரி என்பதை இதைப் படிக்கும் அன்பர்களே தீர்ப்பளிக்கட்டும்.

புண் இருக்கிறது — புண் மறைத்து வைக்கப்பட வேண்டியதுதான்! அதற்காக மறைத்து வைத்தே காலத்தை ஓட்டிவிட நினைப்பது முட்டாள் தனமல்லவா?

விவசாயிகள் பிரச்னை உடனடியாக கவனிக்கப்பட வேண்டியதுதான்! அதற்காக காடுகரம்பாக—விவசாயத்திற்கு லாயக்கற்றதாக—வானம் பார்த்தான் பூமியாக இருப்பவைகள் அப்படியே இருக்கவேண்டுமா?

நிலப் பிரபுக்கள் தொல்லை நிரந்தரமானதல்ல. மக்கள் மனது வைத்தால் ஒரேநாளில் தூக்கியடித்து விடக்கூடிய "அத்திப் பலகைகள்" அவை! ஆனால் நிலத்தின் வளமை? ஒரேநாளில் சித்தியாகக் கூடிய விவகாரம் அல்லவே அது?

அதுபற்றி ஏன் கம்யூனிஸ்டுகள் பேசுவதில்லை?

அங்கே தான், லெனினைப் போட்டுக் 'கொலை' செய்கிருர்கள்! உள்ளதை ஒளித்துப் பேசுகிருர்கள்! விளக்கமாகச் சொல்ல வெட்கப்படுகிருர்கள்! சுருங்கச்

— 7-ம் பக்கம் —

முடிந்த கதை அவர்களுடையது—

முதல் அத்தியாயம் தொடங்குகிறோம் நாம்!

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 26—1—57 ‖ இதழ் 21

தேர்தலில் நாம்!

பூரிப்புத்தரும் செய்தி வெளியாகிவிட்டது! பொல்லாங்குக்காரர்களை இல்லாமல் செய்ய நல்ல வழி பிறந்தாகிவிட்டது. ஆம்! தி. மு. கழக அபேட்சகர்களின் பட்டியல் வெளியாகிவிட்ட மகிழ்வான சேதியைத்தான் பெருமையுடன் குறிப்பிடுகிறோம். பெரும்பான்மையான தொகுதிகளின் பட்டியல் வெளியாகிவிட்ட இந்த நேரத்திலே, நமது பட்டியலைப் பார்த்து எதிர்க்கட்சிக்காரர்கள் பீதியடைகிறார்கள், பயந்து சாகிறார்கள். ஏதேச்சாதிகாரத்திலே வளர்ந்து வந்திருக்கும் காங்கிரசுக் கட்சியினரும் சரி, பிறந்ததிலிருந்தே அறியாமை என்ற இருட் கடலிலே சிக்கித் தவிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியினரும் சரி, நமது பட்டியலைப் பார்த்து, பயந்து, பதைபதைத்து என்னென்னவோ பேசுகிறார்கள்! என்ன பேசுகிறோம் என்று தெரியாமலே கூடப் பேசுகிறார்கள்! உண்மையைச் சொல்லப்போனால், கம்யூனிஸ்டுக் கட்சியினர் நம்மைக் கண்டு, கடுங்கோபம் கொள்கிறார்கள். "காங்கிரசு வெற்றி பெறச் செய்கிறது தி. மு. க." என்று கூறுகிறார் ஒரு 'நெடுநாள்' கம்யூனிஸ்டு. அந்த 'நெடுநாள்' கம்யூனிஸ்டுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம். காங்கிரசின் வெற்றி அதன் உறுப்பினர்களது இராஜிநாமாப் படலத்திலிருந்தே தெரிகிறதே! நாளுக்குப் பல 'பெரும் புள்ளிகளும்' 'பலநாள் புலிகளும்' இராஜிநாமாச் செய்து வரும் வேடிக்கை விநோதத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். காற்றுக் காலத்தில் வாழை குலை சரிவது போல, உறுப்பினர்கள் சரிந்துகொண்டே வருகிறார்கள். அப்படியிருக்க, காங்கிரசின் வெற்றி எந்த அளவிலிருக்கும் என்பது சராசரி அறிவுள்ள சாதாரண மனிதனுக்கே தெரியும். ஆனால் 'ஞானசூன்யங்க'ளுக்கு என்ன சொன்னாலும் தெரியாது எது சொன்னாலும் புரியாது! இருந்தாலும், நமது கடமை, அவர்களை எச்சரிப்பது, சற்று எண்ணிப் பார்க்கச் செய்வது ஆகியவைதான்!

"150 இடங்களில் அகலக் கால் வைக்கும் மர்மம் என்ன? காங்கிரசை வெற்றி பெறச் செய்வதற்கு இது மறைமுகமான வேலையாகும்" என்று மேற்படி 'நெடுநாள்' கம்யூனிஸ்டுசொல்கிறார். "தான் நெடுநாளாக இருக்கும் கட்சி—பல முறை தேர்தலிலே ஈடுபட்டுப் பழக்கப்பட்ட கட்சி—அது கூட 150 இடங்களில் அபேட்சகரை நிறுத்தவில்லையே! ஆனால் தி.மு. கழகம் எட்டாண்டு வளர்ச்சிக்குள் 150 இடத்திற்கு அபேட்சகர்களை நிறுத்துகிறதே! அடுத்த தேர்தலில் அத்தனை இடத்திலும் அபேட்சகர்களை நிறுத்திவிடுமே!" என்ற அச்சம்தான் 'மேற்படியாரை' நடுங்க வைத்திருக்கிறது. ஜனநாயகத்திலே தளராத நம்பிக்கை வைத்துள்ள தி. மு. கழகத்தின் புகழைக் கண்டு, ஜனநாயகத்தை உதறித்தள்ளும் 'பொதுவுடைமையினர்' ஏங்குவதும், அந்த ஏக்கத்தினால் இல்லாத பல சொற்களைச் சொல்லுவதும் அதிசயமில்லைதான். அது அவர்களுக்குப் பழக்கப்பட்ட வேலை; பல நாள் செய்த வேலை!

நாடு மீள-நலிவு தீர, தி. மு. கழகம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறது. தி. மு. கழகம் இந்தவிஷயத்தில் எவ்வளவு தூரம் ஜனநாயக முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். பொதுக் குழுவின் உறுப்பினர்களை மட்டும் கூட்டியோ, அல்லது செயற்குழு உறுப்பினர்களை மட்டும் சேர்த்தோ 'தேர்தலில் ஈடுபடுவது' என்ற முடிவுக்கு வந்துவிடவில்லை தி. மு. கழகம்! மாநில மாநாடு கூட்டி, வந்திருந்த மக்கட் சமுதாயத்தின் ஏகோபித்த தீர்ப்பை 'வாக்களிப்பு' முறையிலே நடத்தி, அதன் பிறகே,—'தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொள்ள வேண்டும்' என்ற மக்கள் தீர்ப்பைக் கண்டபிறகே—தேர்தலில் போட்டியிட முன் வந்திருக்கிறது. அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில்கூட, ஜனநாயக முறையைக் கடைப்பிடித்திருக்கிறது. 'தேர்தல் ஆய்வுக் குழு'வை ஏற்படுத்தி, நாடெங்கும் சென்றுவரச் செய்து, அபேட்சகர்களை நேரில் கண்டு, அவர்களதுசெல்வாக்கை மக்கள் மூலமாகவே அறிந்துவரச் செய்து தான் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

ஜனநாயகத்திலே திளைத்தவர்கள் என்று வீண் பெருமை பேசிக்கொள்ளும் காங்கிரசுக் கட்சியில்கூட அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும்முறை, சண்டையையும் சச்சரவையும்தான் ஏற்படுத்திவருகின்றது. காமராசர், மேட்டுக்கு இழுத்தால், சுப்ரமணியம் பள்ளத்துக்கு இழுக்கிறார், அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில்! கம்யூனிஸ்டுக் கட்சியிலும் இம் மாதிரிக் குழப்பம் இல்லாமலில்லை.

கடந்த காலங்களிலே காங்கிரசுடன் போட்டியிட்ட கம்யூனிஸ்டுகளில் எத்தனை பேர் வெற்றி பெற்றார்கள் என்பது நமக்கு மட்டுமல்ல—கம்யூனிஸ்டுக் கட்சியினருக்கே தெரியும். வழிவழியாகக் காங்கிரசை வெற்றி பெறச் செய்து வந்தது, வருவது கம்யூனிஸ்டுக் கட்சிதான் என்றால், அதில் தவறே இருக்கமுடியாது அப்படியிருக்க, தி. மு. க. மறைமுகமாகக் காங்கிரசை வெற்றிபெறச் செய்கிறது என்று சொல்லும் சொல், வினயமுள்ளவர்களின் பேச்சாகக் கூட அல்ல, விஷயம் தெரியாதோரின் பேச்சாகத்தான் இருக்க முடியும்.

நாட்டு மக்களின் ஆதரவுதான் தி. மு. க. அபேட்சகர்கள் அதிகமான இடங்களில் போட்டியிடுவதற்குக் காரணம்! அதைக் கண்டு பொறுமைப்படுவதோ, பொருத்தமற்ற முறையில் பேசுவதோ, அடிதடி சண்டைகள் நடத்துவதோ நாகரிகமுள்ளவர்களது செயலாக இருக்க முடியாது.

போதாததற்கு, காங்கிரசுக் கட்சி, அபேட்சகர் பட்டியல் தயாரித்திருக்கும் விதமே, கம்யூனிஸ்டுக் கட்சியினர் நம்மைக் குறை கூறுவது தவறு என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. காங்கிரசின் வெற்றி குறுகிய அளவில்தான் இருக்கும் என்பதை காங்கிரசின் உறுப்பினர்களே தெளிவுபடுத்தி வருகிறார்கள். கோட்டைக் குள்ளேயே குத்து வெட்டு நடக்கிறது. கொதித் தெழுந்தவர்கள் உரு மாறுகிறார்கள். கொள்கை யற்றவர்கள் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இது காங்கிரசின் இன்றைய நிலை.

பெரும் பணக்காரர்களை-'தியாகத்தின்' பொருளே அறியாதவர்களை—விடுதலைப் போரில் ஈடுபடாதவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது காங்கிரசுக் கட்சி.

ஆனால், காங்கிரசு அபேட்சகர்களுக்கும், கம்யூனிஸ்டு அபேட்சகர்களுக்கும் எதிராக நிற்கும் நமது தி.மு.க. அபேட்சகர்கள் நீதிவழி நின்று, நேர்மை வழி சென்று, 'கண்ணியம், கட்டுப்பாடு, கடமை' என்ற முழக்கத்தை விடாமல் கடைப்பிடிக்கும் கடமை வீரர்கள். அடிமைப்பட்ட திராவிட நாட்டை மீண்டும் அடைய அயராது பணி புரியும் தி. மு. கழக அபேட்சகர்களையே வாக்காளர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுகிறோம்.

மார்ச் முதல்நாள் தேர்தல்

இராமநாதபுர மாவட்டம்

திருக்கோஷ்டியூர் சட்டசபைத் தொகுதியில்

கண்ணதாசன்

தி. மு. கழக அபேட்சகராகப்

போட்டியிடுகிறார்.

—தி. மு. க.

யார் 'ஏகாதிபத்திய தாசர்கள் ?'

தமிழகத்தில் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதானமான எதிரிகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்வதில் கம்யூனிஸ்டு 'நண்பர்'கள் மிதமிஞ்சிய துடிப்புக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். கடந்த காலத்தில் தாங்கள் புரிந்தனவும் நிகழ் காலத்தில் இழைத்து வருவனவுமான 'ஜன்ம கரும பாவங்களை', மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழக எதிர்ப்புக் குட்டையில் மூழ்கி, 'கழுவி'க் கொள்ளலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும். தேர்தல் நெருங்கநெருங்க அவர்கள் நமது கழகத்தின்மீது எதிர்ப்புக் குட்டையில், ஏற்கனவே நீந்திக் கொண்டிருக்கும் சில ஒப்புக் கொள்ளப்பட்ட பிற்போக்கு வாதிகளுடன் சேர்ந்துகொண்டு சேற்றை வாரி இறைத்து வருவதைக் கண்டால் நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது; சீற்றம் பிறக்கவில்லை. காரணம், இந்த 'நண்பர்'கள், தங்கள் முழு ஆற்றலையும் ஒன்று திரட்டி, எத்தனைதான் மூர்க்கத்தனமாக ஆவேசத்தோடு எதிர்த்தாலும், கழகம், அந்த எதிர்ப்பினைத் தாங்கிக் கொள்ளும் வலிவையும் பொலிவையும் நிச்சயம் பெற்றிருக்கிறது என்பதுதான். இவர்களது, கழக எதிர்ப்பு, நாம் எதிர்பார்த்ததுதான் என்பதுடன் இவர்களது எதிர்ப்புக்கான மூல காரணமும் நாம் அறிந்ததுதான். இவர்கள் தங்களுடைய நிலை தமிழக அரசியலில் ஆட்டங் கண்டுவிட்டதை அறியும் போது, உணரும்போது, ஏற்படும் ஏமாற்றத்தை, அது இயற்கையாகத் தோற்றுவிக்கும் ஆத்திரத்தை இப்படிக் கொட்டிக் கொள்கிறார்கள். அவ்வளவே!

இந்த நண்பர்களுக்கு, தி. மு. க. 1953-ம் ஆண்டுவரை, ஒரு ஜனநாயக இயக்கமாகத் தெரிந்தது. சிறையிலிருந்த ஐவரைச் சந்தித்து, கழகத்தோடு ஒன்றிநின்று, கழகம் துவங்கிய கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத்தை விரிவான அடிப்படையில் 'வெகுஜன'ப் போராட்டமாக உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரசியல் இலாபம் தேட நினைத்துத் தோல்வியை அணைத்துக் கொண்டார்கள். 'தி. மு. க. தலைவர்களே, மக்கள் பிரச்சினையில் ஒன்றுபடுவோம் வாரீர்' என்று இவர்களுக்கு எழுதத் தெரிந்தது அப்போது. அன்றும் தி. மு. க. திராவிடநாடு என்ற லட்சியத்தைக் கொண்டுதான் நாட்டில் உலவிக் கொண்டிருந்தது. ஆனால், மூன்றாண்டுகளுக்குப் பிறகு, 1956-ல், தி. மு. க. ஒரு 'ஜனநாயக விரோத'மான இயக்கமாகப் படுவானேன்? அன்றைய தி. மு. க.வின் கொள்கைகள், இன்று பிசகிவிட்டனவா? அல்லது ஜனநாயகம் என்பதற்கு உலகில் திடீரென, எதிர்மறையானதோர் இலக்கணம் வகுக்கப்பட்டு விட்டதா?

இந்தக் கம்யூனிஸ்டுகளின் இந்தக் குழப்பம், நிலைமாற்றம், முரண்பாடு ஒன்றும், ஆச்சரியத்திற்குரியதல்ல.

ஏனெனில் 'புரட்சி' எது, எதிர்ப் புரட்சி எது என்பதையே, கண்டு, ஆராய்ந்து அறிந்து தெளிந்து கொள்ள முடியாத, மாபெரும் 'புரட்சி வீரர்'களாயிற்றே, இவர்கள்! சீனாவில், மாசேதுங் நடத்தியது 'புரட்சி' என்று தெரியாமல், 1948-ம் ஆண்டுவரை, அதனை, 'எதிர்ப் புரட்சி' என்றும், மாசேதுங்கை, எதிர்ப் புரட்சிக்காரன் என்றும் 'ஏகாதிபத்திய தாசன்' என்றும் ஏசின 'ஞானசூனியங்கள்' தானே இவர்கள்! ஒரு பெரிய நாட்டில் நிகழும் மகத்தானதோர் ஆயுதப் புரட்சியையே எதிர்ப்புரட்சி என்று பழித்த இவர்களைத்தானா, ஒரு கழகம், ஜனநாயக இயக்கமா, ஜனநாயக விரோதமான இயக்கமா என்பதை நிர்ணயிக்க நீதிபதிகளாக நியமிக்க வேண்டும்!

இவர்களுக்கு 'ஞானப் பால்' ஊட்டும் ரஷ்ய ஞானாசிரியர்கள், ஒரு புரட்சியை, எதிர்ப்புரட்சி என்று நிர்ணயித்தால் இவர்களும், உடனே அதனை எதிரொலிப்பார்கள். அவ்வளவே இவர்களது பணி! யந்திரங்களாகிவிட்ட இவர்கள், ரஷ்யாவிலிருப்போர் இயக்குவிக்கும் பாணியில், ஆடுவார்கள், பாடுவார்கள். இதனை அவர்களே ஒப்பியுமிருக்கின்றனர்.

இதன் விளைவு, நீங்காத குழப்பம். தினம் தினம், தவறுகளைச் சுலபமாகச் சுகமாகப் பிரசவித்துக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கடந்த காலத்தில் செய்து குவித்துள்ள மலையத்தனை தவறுகளை, பட்டியல் தயாரித்து வெளியிட்டார்கள் அவர்களே! அந்தப் பட்டியலில் காணப்பட்ட தலையாய தவறு, 'தங்கள் சுயசிந்தனையை, மாஸ்கோவிற்கு, அடிமைப்படுத்திவிட்டோம்' என்பதுதான்.

இந்தச் சுயசிந்தனை அற்ற மாஸ்கோ தாசர்கள், தவறுகளைச் செய்வதையே தொழிலாகக் கொண்டுவிட்டவர்கள், தாங்கள் நேற்றுப் பின்பற்றிய கொள்கையே தவறானது என்று இன்று கூறுகிறவர்கள், இன்று தாங்கள் பின்பற்றிக்கொண்டிருக்கும் கொள்கையேனும் சரியானது என்ற தெளிவும், உறுதியும் பிடிப்பும் தங்களுக்கே இல்லாதவர்கள், பிறிதொருவர் கொள்கையை விமர்சிப்பதற்கு, எந்த யோக்கியதாம்சம் உடையவர்களோ?

இந்தக் கொள்கைக் குழப்பவாதிகளான மாஸ்கோ தாசர்கள், நமது கழகத்தின்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் முக்கியமாக, மூன்றாகும். முதலாவது, தி. மு. கழகத்தவர் ஏகாதிபத்திய தாசர்கள்! இரண்டாவது, 'இந்தியாவில் வாழும் சகோதர தேசிய இனங்களிடை நிலவும் ஒற்றுமையைச் சீர்குலைப்பவர்கள்; மூன்றாவது, திராவிட நாடு திராவிடர்க்கே என்பது பாசிச வெறி கொண்ட கூச்சல் என்பவைதாம் அவை.

'ஏகாதிபத்திய தாசர்கள்' என்ற முதல் குற்றச்சாட்டினை இங்கு ஆராய்வோம்.

'வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக் கண்டத்தினை ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த போது, தென்னாட்டிலிருந்த நீதிக் கட்சியினர் வெள்ளைக்காரர்களுக்குச் சாதகமாக யுத்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். வெள்ளையரின் வெற்றிக்காகப் பாடுபட்டார்கள். எனவே, அந்த நீதிக்கட்சியின் இன்றைய தலைமுறையினரான தி. மு. கழகத்தவர், ஏகாதிபத்திய தாசர்கள்' என்று பழி சுமத்துகிறார்கள்.

இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வெள்ளைக்காரர்களுக்கு யுத்தத்தில் வெற்றி கிடைக்கவேண்டும் என்று கூறியது மட்டுமே, கூறியவர்களை, ஏகாதிபத்திய தாசர்கள் என்று பறை சாற்றுவதற்குப் போதுமானது என்றால், தென்னாட்டில் இருந்த நீதிக்கட்சியினர் மட்டும் அந்தக் 'குற்றத்'திற்கு உரியவர்கள் அல்லர். இந்தக் கம்யூனிஸ்டு நண்பர்களும், அந்தக் குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெறுவர். பிரிட்டன் உள்ளிட்ட நேசநாடுகள் வெற்றிபெற வேண்டுமென தாங்கள் முழக்கமிட்டதைக் கம்யூனிஸ்டுகள் மறந்துவிட்டார்களா?

இரண்டாம் யுத்தத்தில் வெள்ளையர் தோற்பதில்தான் இந்தியாவின் சுதந்திரம் அடங்கியிருக்கிறது என்றனர், காந்தியாரும், அவரது தலைமையிலிருந்த காங்கிரசாரும். ஆகவே வெள்ளையருக்கு யுத்த நிதி தராதீர். பட்டாளத்தில் சேராதீர் என்று மக்களைக் கேட்டுக்கொண்டனர். இது அவர்கள், கொண்ட கொள்கை, இராஜதந்திரம். ஆனால் இந்த இராஜதந்திரம், தவறானது. வெள்ளையர், நாஜி கண்டத்தில் தோற்றால், நமது 'எஜமானர்'கள், ஆள் மாறுவார்களே தவிர இந்தியாவிற்கு 'விடுதலை' கிடைக்காது. காங்கிரஸ் தலைமை தவறான வழியில் செல்கிறது என்று கூறி, 'ரேடிகல் ஜனநாயகக் கட்சி' என்ற கட்சியைத் தோற்றுவித்து, வெள்ளையர் வெற்றிக்குப் பாடுபட்டார், காலஞ்சென்ற எம். என். ராய். இந்த ராய் அவர்களை, அவரது கடைசிக்காலத்தில் 'குடியரசுத் தலைவர்' இராசேந்திரப் பிரசாத் அவர்கள் மாதம் இருநூறு ரூபாய் தந்து காப்பாற்றி வந்தார். இந்த ராய், ஒரு காலத்தில் லெனினுக்கு அடுத்த உலகப் பெரும் புரட்சி வீரனாக, இங்குள்ள கம்யூனிஸ்டுகளால் மட்டுமல்ல, இவர்களது ஞானத் தாய்தந்தையரான ரஷ்யத் தலைவர்களாலேயே போற்றப் பட்டவர்தான். இவரையும், இவரது வெள்ளையர் வெற்றி பெறவேண்டும் என்ற கொள்கைக்காக, ஏகாதிபத்திய தாசர் என்று தூற்றுகிறார்களா? இல்லையே! பின், ஏன், அதே கொள்கையைத் தென்னாட்டில் கடைப்பிடித்த நீதிக்கட்சி மீது மட்டும் பழி சுமத்தவேண்டும்? நீதிக்கட்சி மீது கூட அல்ல, அந்த நீதிக் கட்சியை, மாளிகை வாசிகளிடமிருந்து தட்டிப் பறித்து, அதனை திராவிடர் கழகமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக, பெயரை மட்டுமல்ல, உருவத்தையும், அதன் உள்ளடக்கத்தையுமே மாற்றி, மக்கள் இயக்கமாகச் செய்தவர்களைப் பழிப்பது ஏன்? காரணம் இல்லாமல் இல்லை!

தட்டுக் கெட்டுப் போனவள் உத்தமியைப் பழிப்பதில்லையா? அந்தக் கதைதான்.

இன்று இந்தக் கம்யூனிஸ்டு நண்பர்கள், தென்னாட்டு மக்களின்,— திராவிடர்களின், - தமிழர்களின் வாழ்வைச் சூறையாடும் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு தாசானுதாசர்களாக இருக்கிறார்கள் அல்லவா? அந்தத் தாசர் கோலத்தை, தமிழர் தம் கண்களிலிருந்து மறைத்து விடத்தான் நம்மை 'ஏகாதிபத்திய தாசர்' என ஏசுவது!

வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகள் 'இந்திய ஒற்றுமை' என்ற பெயரால் தமிழர் தம்மை அடிமை கொண்டு, அவரது வாழ்வையும் வளத்தையும், தன்மானத்தையும் சூறையாடும் கொடுமைக்கு, இந்தக் கம்யூனிஸ்டு நண்பர்கள், உடந்தையாயிருக்கிறார்கள். இதனை மூடி மறைக்கவே நம்மை ஏசுகிறார்கள்.

வடவரது கீழ்த்தரமான ஆதிபத்திய இச்சைகள், மிருகத்தனமான சுரண்டல் நோக்கங்கள், இவற்றில் பங்குபெறும் அந்தக் கம்யூனிஸ்டுகள் நம்மை, அந்தப் பிற்போக்குவாதிகளோடு கைகோர்த்துக் கொண்டு ஏசுவதற்கு வேறு காரணம் இருக்கமுடியாது!

இந்தியைத் திணிக்கிறது டில்லி பலவந்தமாக. தமிழ் மொழிக்காக, வாய்கிழிய இன்று கூச்சலிடும் இவர்கள், தமிழுக்குச் சவக்குழி தோண்டும் சதியாம் இந்தித் திணிப்புக்குச் சம்மதம் தந்துள்ளார்கள். இந்தத் துரோகத்திற்கு மூடுதிரையாகத்தான், நம்மை ஏகாதிபத்திய தாசர்கள் என்று ஏசிடுவதைப் பயன்படுத்த நினைக்கிறார்கள். வேறென்ன?

இவர்களது அடுத்த இரு 'குற்றச்சாட்டு'களையும் அடுத்த வாரம் ஆராய்வோம். ★

கமலப்பிரியன்

நன்மணம் சேர்க்கும் நலமதனைத் தான்நல்கும்
அண்ணா பத்தியென்றே அறி!

காமராசரும் பெண்களும்

ப. புகழேந்தி

தடியடி தர்பார் நடத்தி, சிறைக் கூடங்களை நிரப்பி, தூக்கு மேடைக்குச் சிலரைக் 'காவு' கொடுத்து, துப்பாக்கியை வெடிக்கச் செய்து மண்டை ஓடுகளை அடுக்கி வைத்த பிற்பாடும், தன்னிடத்திலே கொஞ்சம் 'தயாள குணம்' ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதைப் பறைசாற்றிக்கொள்ள ஆளும்வர்க்கம் வைத்திருக்கும் ஒரே ஒரு சரக்கு தேர்தல்.

ஆளப்படுபவனாக இருப்பவன், தன்னை ஆள்வோன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்பதை அவன் போக்கில் முடிவு செய்து கொள்ள, 'யார் செய்த புண்ணியத்தாலோ' இந்த ஓட்டுரிமை என்ற ஒன்றைப் பெற்றுத் தொலைத்திருக்கிறான். அதனாலேதான் அதுவரை அவனை ஆட்டிப் படைத்து, வரி போட்டு வாட்டி, அவன் பிரயாணம் செய்யும் ரயில் பாதையை முறையாகக் கவனிக்காததால் ஏற்பட்ட விபத்து பற்றியும் கவலைப்படாது, அவனைக் 'காட்டுமிராண்டி' என்று திட்டித் தீர்த்திருந்த போதிலும் அவனை நெருங்கி 'உன் ஓட்டு எனக்கே!' என்று, ஏகாதிபத்திய வாதிகள் முதல் 'ஏழைகள் கட்சிக்காரர்கள்' என்று தங்களை விளம்பரப்படுத்திக் கொள்பவர்கள் வரை கூப்பாடு போடுகிறார்கள். இந்தக் கூப்பாடுகளின் உண்மை புலப்படாது பணபலத்துக்கும், படைபலத்துக்கும் ஆட்பட்டு, தன்னிடத்திலே தரப்பட்டிருக்கும் வாக்குச் சீட்டை யாருக்குத் தருவது என்பதிலே உறுதியான முடிவை, முறையாகச் செய்துகொள்ள முடியாமல் 'சாய்ந்தால் சாயிற பக்கம்' சாயத் தொடங்கும்பொழுதுதான் ஓட்டுச் சீட்டை உடையவன் முட்டாளாகிறான். அந்த முட்டாளின் ஓட்டைப் பெற்றுவிடுவதால் அயோக்கியன் ஆட்சிக்கு வந்துவிடுகிறான்.

இப்படி வந்துவிட்ட ஆட்சி ஒன்றிரண்டு நாடுகளில் மட்டுமல்ல, உலகெங்குமே சில ஆண்டுகள் வரைதான் நிலைத்து நின்றிருக்கிறது என்பதை சரித்திரத்தின் பக்கங்கள் நமக்குச் சொல்லிக் கொண்டேயிருக்கின்றன.

1947ம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்து ஆளும்பொறுப்பு காங்கிரசார் கைக்கு வந்தது முதலே நாம் வாழும் தென்பகுதி வடவர்களின் வேட்டைக்காடாக ஆக்கப்படுவதையும், இங்குள்ளோர் அங்கு அலட்சியப்படுத்தப்படுவதையும், நாம் மட்டுமல்லாமல் அன்று விரிந்த சென்னை மாநிலத்தின் நிதி அமைச்சராக இருந்த கோபால ரெட்டி முதல், இன்று அந்த பதவியை 'எஞ்சிய சென்னை' மாநில ஆட்சியில் வகிக்கும் சுப்பிரமணியம் வரை கண்டும் சொல்லியும் வந்திருக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால் பொறுப்பான பதவி வகிக்கும் சில 'பிரமுகர்கள்', தம்மையும் மறந்து, நம்மையும் ஒருபடி மிஞ்சி 'வடநாட்டோடு தென்னாடு போர் தொடுக்கும் காலம் வந்துவிடும்' என்று தமது (உள்ளக்) கருத்தினை வெளியிட்டு விளம்பரம் பெற்றிருக்கிறார்கள்! என்ற போதிலும் இந்த நிலைமைகளை முறையாக எடுத்துக்காட்டி, அதற்கு மாற்றுத் திட்டமான திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும் என்ற மகத்தான தேசியத் திட்டத்தை உருவாக்கிய காரணத்தினால், திராவிட முன்னேற்றக்கழகம் பொதுமக்களின் ஆதரவைப் பெற்று, தனிப் பெரும் இயக்கமாகத் திகழ்கிறது.

ஆதிக்கம் செலுத்தும் வடவர்களால் ஏற்படவிருக்கும் ஆபத்துகள் பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்காட்டிய நேரங்களிலெல்லாம், இந்தப் பகுதிக் காங்கிரஸ் தலைவர்கள், கழகம் எடுத்துக் காட்டுபவற்றைச் சாதிக்கப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்று சட்ட மன்றத்திற்கு வரட்டும் என்று அறைகூவல் விடுத்துப் பேசினார்கள் எல்லாக் கூட்டங்களிலும். அப்பொழுது திருச்சி மாநாடு நடைபெறவில்லை. தேர்தல் ஈடுபாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர், மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு அந்தத் தேர்தலில் தி. மு. கழகம் கலந்துகொள்வதற்கில்லை என்று தீர்மானித்தது.

அந்த முதல் பொதுத் தேர்தல் முடிந்தபிற்பாடு தி. மு. கழகம் முன்னைவிட வலிவும் பொலிவும் பெற்று வளர்ந்தது. அலட்சியத்தாலே அழித்துவிட எண்ணியவர்கள், அனுவசியமான காரியங்களில் மட்டும் கழகத்தின் பெயரைக் காட்டி அதனால் அது எவ்வளவு ஆதரவை இழக்கும் என்று தப்புக் கணக்குப் போட்டவர்கள், எல்லோரையும் அலட்சியப்படுத்திவிட்டு, உயர்ந்த எண்ணங்கள் மலரும் சோலையாய், மறுமலர்ச்சிப் பேரியக்கமாய் வளர்ந்தது. மும்முனைப் போராட்டத்தில் ஐயாயிரவர் ஒரே நாளில் சிறை சென்ற அதிசயக் கதையைஎழுதும் ஆற்றல் அதற்கு இருந்தது. தமிழகமெங்கணும் 'பிப்ரவரி 20' நடத்தும் பேராற்றலை அது பெற்றிருந்தது.

அப்பொழுதும் எப்பொழுதும் காங்கிரசார் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடவில்லை என்ற ஒன்றையே பெரிய குற்றமாகக் கருதிப் பேசி வந்தனர்.

"தி. மு. கழகத்தார் வடநாட்டு ஆதிக்கத் தொல்லைகளை எடுத்துக் காட்டுகிறார்களே...!"

"மணிமுத்தாறு திட்டத்துக்குப் பொதுமக்களிடம் சென்னை ஆட்சியாளர்கள் கடன் பெறுகின்றனர். ஆனால் 150 கோடி ரூபாயில் பக்ரா-நங்கல், 78 கோடியில் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம், 92 கோடியில் ஹிராகுட் அணைக்கட்டுத் திட்டம்! இவை வடநாட்டில். இது அடுக்குமா?-தி. மு. கழகத்தார் இப்படிக் கேட்கிறார்கள்."

"நெய்வேலியில் வேலை செய்யும் தொழிலாளர்களில்கூட வடநாட்டினருக்கு அதிகக் கூலியும் தென்னாட்டினருக்குக் குறைந்த கூலியும் தரப்படுவது ஏன் என்று கேட்கிறார்கள்."

"இந்திமொழி ஆதிக்கம் தமிழின் வளர்ச்சியைக் கெடுத்துவிடும் என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்..."

இப்படிப் பொதுமக்கள் தி. மு. கழகம் பற்றி எதை எடுத்துக்காட்டினாலும் காங்கிரசின் தலைவர்களிலிருந்து நாலணா உறுப்பினர் வரை "திராவிட முன்னேற்றக் கழகத்தினரா, அவர்களைப் பற்றிப் பேசாதீர்கள். அவர்களுக்கு வலிமை இருந்தால் தேர்தலில் ஈடுபட்டு வென்று சட்டசபைக்கு வந்து எதை வேண்டுமானாலும் சாதிக்கட்டுமே-சட்டசபையையே எட்டியும் பார்க்காத அவர்களைப் பற்றி 'சட்டசபையிலேயே பிரசவமான' எங்களிடத்திலா கூறுவது?" என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். அந்தக் கூடாரத்தில் கொஞ்சம் புத்திசாலி என்று அவர்களாலேயே குறிப்பிடப்படுகிற கோவைச்சீமான் சுப்பிரமணியம்கூட, ஒருபோது தி. மு. கழகத்தவருக்கு நல்ல காரியங்கள் செய்யும் எண்ணம் இருந்தால் தேர்தலில் போட்டியிடட்டும் என்று 'அருளிப்' போந்தார்.

இத்தியாதி காரியங்கள் அனைத்தும் பின்னணியாக அமைய, இந்த நாட்டு அரசியலில் புதிய திருப்பம் ஒன்றினைச் செய்யும் மகத்தான சாதனையை, சென்ற ஆண்டு மே திங்களில் நடைபெற்ற திருச்சி மாநில மாநாடு செய்து காட்டியது. அந்த மாநாட்டு இறுதியில் நிறைவேற்றப்பட்ட சட்டமன்ற நுழைவுத் தீர்மானத்தை, வழிமொழியும் மகத்தான வேலையை ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் 'விருதுநகர் வீரர்', 'பச்சைத் தமிழர்', குடியாத்தத்தில் நாணயமான முறையில் ஓட்டுப் பெற்று நாட்டின் நாயகராக வந்த 'அரும்பெரும் தலைவர்,' காமராசர் ஏற்றுக்கொண்டார்.

அந்தத் திங்கள் முழுமையும், அதற்குப் பிற்பாடும் அதுவரை வாய்மூடியாகக் கிடந்த அவர் பேசிய பேச்சுக்களெல்லாம் தி. மு. கழகத் தேர்தல் ஈடுபாடு பற்றியதுதான்.

எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஓட்டு அளிக்காதே என்று பேசுவது எந்த ஜனநாயக நாட்டிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைதான். ஆனால் எந்தக் காரணங்களைக் காட்டி அதனைக் கூறவேண்டும் என்பதிலேதான் அரசியல் நாணயம் என்பது அடங்கிக் கிடக்கிறது. அரசியலைப் படிக்காத, ஆனால் ஈடுபாடு மட்டுமே கொண்ட காமராசர் திருச்சி மாநாடு முடிந்ததும் அந்த வட்டாரத்திலே, அதே வாரத்திலே பேசிய கூட்டம் ஒன்றில் குறிப்பிட்ட அந்தவாசகம் உண்மையில் 'அறியாமை இருளில், அடுக்குமொழிச் சாதுரியத்தில், சிறுபிள்ளைகளின் பேச்சில் மயங்கிக்கிடந்த' மக்களுக்கு 'வரப்பிரசாத'மாகும்:

"திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பெண்களே தோற்கடியுங்கள்...!"

அனைத்திந்திய மாதர் சங்கத் தலைவியாக வீற்றிருக்கும் அம்மையார் இந்த விதத்திலே பேசியிருந்தால் அதிலே அர்த்தம் உண்டு. அல்லது காங்கிரசிலே இருக்கிற, வழக்கமாக இதுபோல ஏதாவது உளறிக்கொட்டும் பிரச்சாரப்பெண் பீரங்கி இப்படி முழங்கி இருந்தால் கூட அதிலே தவறில்லை. ஆனால் இவற்றில் சம்பந்தமில்லாத - சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்பாத - பிரம்மச்சாரிக் காமராசர் இப்படிச் சொன்னதுதான் நம்மை அதிசயத்தில் ஆழ்த்தியது.

அதற்கென அவர் கண்டுபிடித்திருந்த காரணம் இருக்கிறதே அது

தூத்துக்குடியில் கம்யூனிஸ்டுகள்!

"கடந்த 15-1-57 பகல் 2 மணி சுமாருக்கு, தோழர் தாளமுத்து (தி. மு. க.) கே. வி. கே. சாமி வழக்கு சம்பந்தமான சாட்சிகளைப் பார்க்கத் தனிமையில் சென்றுகொண்டிருந்தபோது, சில கம்யூனிஸ்டுகள் அவரை அடித்துக் காயப்படுத்தியது மட்டுமல்லாமல், அவரது தங்கை தோழியர் பாக்கியம் அம்மையாரையும் இன்னொரு இடத்தில் அடித்து, அவரது சங்கிலியை அறுத்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள்.

"அன்றிரவு சில கம்யூனிஸ்டுகள், வடக்கூர் தி. மு. கழகத்திற்குச் சென்று படங்களையெல்லாம் உடைத்து, கொடிகளையும் அறுத்து அட்டூழியங்கள் செய்ததோடல்லாமல், மக்கள் மறுமலர்ச்சி மன்றம் சென்று அங்கும் தாக்குதல் நடத்திவிட்டு, தாளமுத்துவின் தங்கை பாக்கியம் அம்மையாரின் வீடு சென்று, பூட்டப்பட்டிருந்த அவ்வீட்டின்மேல் கற்களை வீசிக் கலாட்டா செய்திருக்கின்றனர். இந்த விவரமும் போலீசாருக்கு உடனே தெரிவிக்கப்பட்டது.

"மேலும் அன்றிரவே சுமார் 1 மணிக்கு ஏராளமான கம்யூனிஸ்டுகள் டூவிபுரம் என்ற பகுதியிலுள்ள கழக உட்கிளைக்குச் சென்று, அண்ணா, கே. வி. கே. சாமி ஆகியோரின் படங்களை நொறுக்கி, கற்களை வீசி ஓடுகளையெல்லாம் உடைத்து, கழகத்தின் முன்டக்கமுள்ள தட்டிக் கதவை அரிவாளால் வெட்டி, கழகத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ள 'போர்டை'யும் வெட்டி வெளியிலே வீசி, கழகக் கொடிகளை அறுத்து, பல பகுதிகளிலும் தூக்கி எறிந்தது மட்டுமன்றி, கழகத்தின் உட்புகுந்து அங்கிருந்த 3 உண்டியல் பெட்டிகளையும் உடைத்து, அதிலுள்ள பணத்தையும், மேசையைத் திறந்து, அதில் வைக்கப்பட்டிருந்த 'மைக்' மற்றும் செலவு வகைக்காக வைக்கப்பட்டிருந்த ரூ. 57-6-3 யும் கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

"இந்த ஈனச் செயல்களை, நகர கம்யூனிஸ்டுத் தலைவர் ஐசக், நகரசபை உறுப்பினர்கள் மாணிக்கம், சாமிதாஸ், 'தினத் தந்தி' பத்திரிகை நிருபரான சுடலை, இன்னும் சுமார் 25 கம்யூனிஸ்டுகள் சேர்ந்து செய்ததாக, அப்பகுதி வாழ்மக்கள் என்னிடம் சொல்லவே, இதனை உடனே போலீசாருக்கு எழுதி அனுப்பிவிட்டு வந்தேன்.

"இந்த அளவுக்குக் கம்யூனிஸ்டுகள் அட்டூழியங்களிலும் அதிக்கிரமச் செயல்களிலும் ஈடுபட்டு வருகிறபோதும்கூட, நாங்கள் அமைதியாகவே இருந்துவருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

செயலாளர்,
தி. மு. கழகம், தூத்துக்குடி

முறையாகக் கணக்கிட்டால் ஒரு 'டார்வின்தியரி' அல்லது 'ராமன் விளைவு' ஆகும்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்கள் மாநாடு பற்றி எழுதி, விட்டுச்சுவர்களையெல்லாம் கெடுத்துவிட்டதால், பெண்கள் தி. மு. கழக அபேட்சர்களைத் தோற்கடிப்பார்கள்..."

காமராசரின் இந்தப் 'புத்திசாலித்தனமான' ஆரூடம் நமக்குச் சிரிப்பை 'உண்டாக்கியதே தவிர ஆத்திரத்தைத் தரவில்லை. ஏனென்றால், தமிழ்நாடு என்ற பெயர் உலகத்துக்குத் தெரியாது என்று சொன்ன அதிமேதாவி அவர்! அவரை நமக்குத் தெரியும்! ஆதலால் நாம் வழக்கம்போல அமைதியாக இருந்துவிட்டோம்.

ஆனால் பொறுமையையே தமது உடைமையாக்கிக்கொண்டுள்ள தாய்மார்கள் கூட அதனை அவ்வளவு அமைதியாகச் சகித்துக் கொள்ளத் தயாராக இல்லை. 'பெண்களை எண்ணிவந்த திருக்கூட்டத்தின் பின்னோடியாம் காங்கிரசின் கொலுப் பொம்மையே, நாங்கள் செய்ய இருக்கும் செயலது பொதுத் தேர்தலில், என்பதை இதோ கொஞ்சம் மாதிரிக்குக் காட்டுகிறோம்' என்று சூளுரைத்த வண்ணம், சில தினங்களுக்கு முன்னால் கடற்கரையில் ஒரு மகத்தான பொதுக்கூட்டத்தைக் கூட்டினார்கள். அதிலே காமராசர் யாரைப் பெண்கள் தோற்கடிப்பார்கள் என்று குறிப்பிட்டாரோ, அதே திராவிட முன்னேற்றக் கழகத்தவரை, அதனைக் கண்டெடுத்த இந்தத் தலைமுறையின் மகத்தான தலைவர் **அண்ணா** அவர்களை, கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பேற்றுள்ள நாவலர் **நெடுஞ்செழியன்** அவர்களைப் பேசவைத்தார்கள். அவர்கள் பேசும்போது இடையிலே பேசிய தாய்மார்கள், காமராசரின் முகத்திலே கரி பூசுகிற முறையில் ஆயிரத்துப் பதினொரு வெண்பொற்காசுகளை அளித்துவிட்டு 'இன்று நோட்டுக்கள் தருகிறோம்—நாளை தேர்தலில் ஓட்டும் தருவோம்' என்று உறுதிமொழி அளித்தார்கள்.

'சொர்க்கம் மாதாவின் பாதத்தடியிலே' என்று இஸ்லாம் கண்ட முகமது சொல்லிப் போனார். அந்த உயர்ந்த மாதர் குலத்தினர் மகத்தான தனது வாக்குறுதியை அளித்து 'பொன்னிறக் கதிரோடு போந்த பகலவன் இந்நில மக்கள் பால் தன்விழி செலுத்தும்' சரித்திரப் பிரசித்தி பெற்ற நமது சட்டசபை வெற்றிக்கு வழிகோலி இருக்கின்றனர்.

அவர்கள் அளித்த நிதியைப் பெற்றுக்கொண்ட போது நம்முடைய தலைவர் சொன்னார்:

"தாய்மார்கள் இன்று கழகத்திற்கு நிதி அளித்து, கழகத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். நம்மை நமக்கே தந்த பெருந்தன்மையும் பெருமையும் கொண்ட தாய்மார்கள் இன்று நமக்கு நிதியும் தந்து, நமது காரியங்களுக்குத் துணைபுரிவது பெருமைக்குரியது மட்டுமல்ல - நமது ஆழ்ந்த நன்றிக்கும் உரியதாகும்.

"தேர்தல் நிதியாகத் தாய்மார்கள் ஆயிரத்திப் பதினொரு ரூபாய் தந்திருக்கிறார்கள். இதுபோல நிதி வழங்கப்படுவது இரண்டே சம்பவங்களின் போதுதான்; ஒரு சம்பவம் வீட்டிலும், மற்றது நாட்டிலும் நடைபெறுவது. திருமணங்களின்போது, மணமக்களுக்கு வேண்டியவர்கள்-உறவினர்கள் நண்பர்கள் எல்லாம் 'மொய்' எழுதுவார்கள்; அது வீட்டில் நடைபெறுவது!

"நாட்டிலே நடைபெறுவது, இங்கே நிதி வழங்கப்படுவதாகும். தன் நாட்டிற்கு ஆபத்து என்று தெரிந்ததும் அந்த ஆபத்தை முறியடிக்க நாட்டு மக்கள் நம்போன்றோர்க்கு, உதவுவதுதான் அந்தச் சம்பவம்!

"அந்த நாட்களில் நாட்டுக்கு ஆபத்து என்றால் வீட்டுக்கு ஒரு வீரனை அனுப்பித் தருவர்! இந்தக் காலத்தில் வீட்டுக்கு ஒரு வீரன் மட்டும் போதாது என்பதால், அந்த வீரர்கள் விடுதலைக் காரியங்களில் ஈடுபட நிதியும் தந்து உதவுகிறார்கள்!"

தலைவரின் இந்தப் பொன்னான வாசகத்தைக் கண்ணென மதித்து காளையரை, காதகனை, விலைமதிக்க வொண்ணா வாக்குரிமைகளை அளிக்கத் தயாராயுள்ள அன்னைக் குலத்தினரை உள்மாரப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் அவர்களாலேயே பாடம் புகட்டப்பட்ட காமராசருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குகிறோம். ★

அறிவிப்பு

தோழர் தென்னரசு அவர்களுக்குக் கடிதம் எழுதுவோர், தேர்தல் முடியும் வரை பின்கண்ட முகவரிக்கு எழுதவும்:

எஸ். எஸ். தென்னரசு,
திருக்கோட்டியூர்
(இராமநாதபுரம் மாவட்டம்)

பிப்ரவரி 1 ம் தேதி
முல்லை
எங்கும் கிடைக்கும்

ராஜினமா

அரசியல் விவகாரங்களில் சில குறிப்பிட்ட வார்த்தைகள் எப்பொழுதும் அடிபட்டுக் கொண்டேயிருக்கும். அந்த வார்த்தைகள் தவிர, வேறு வார்த்தைகளைப் போட்டால் அர்த்தமே வேறுபட்டதாகிவிடும் என்கிற அளவு, சில குறிப்பிட்ட சொற்றொடர்கள் சில இடங்களில் கையாளப்பட வேண்டி வரும். எப்படியோ இந்த அரசியல் குட்டையில், ராஜினமா என்ற கட்டை எல்லோருக்கும் தெரிந்து மிதக்கும் ஒன்றாக நிற்கிறது.

ராஜினமா என்ற சொல்லுக்குப் பின்னால் எப்பொழுதுமே ஒரு பயங்கரம் காத்துக் கிடக்கும். சில வேளைகளில் மட்டுமே மகிழ்ச்சியைத் தருவதாக, அது அமையும்.

அதோடு, ராஜினமா என்பதை விளையாட்டாய்ப் பயன்படுத்தி அதன்மூலம் 'கெண்டையைக் காட்டி விராலைப் பிடிக்கும்' முறையில் நல்ல பட்டனை எதிர்பார்க்கும் பிரமுகர்களும் இருக்கிறார்கள். இருக்கிற அதிகாரத்தை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ளவும், பெற்றிருக்கிற சலுகைகளை மேலும் பெருக்கிக் கொள்ளவும் அவர்கள் கையாளுகிற மகத்தான தந்திரமாக அது இருக்கிறது. அப்படிக் கையாண்டிருப்பவர்கள் நாட்டுக்கு நாடு இல்லாமல் போகவில்லை.

நாடு மட்டுமென்ன, வீட்டிலும் இந்த ராஜினமாப் 'படம்' அடிக்கடி லாப நோக்கத்தோடு காட்டப்படுவதுண்டு. செலவுக்கு அதிகமாகப் பணம் வேண்டும் என்று கருதுகிற வீட்டரசி சம்பளப் பணத்தைக் கணவன் கொண்டுவந்து தரும்பொழுது 'இந்தத் தொல்லை எனக்கு வேண்டாம்' என்று கூறிச் சலித்துக் கொள்வதும், அதைக் கண்டு மயங்கிய 'கொண்டவன்' அவள் விருப்பப்படி செலவிட அனுமதிப்பதையும் நாம் கண்டு வந்திருக்கிறோம். வீட்டுப் பொறுப்பை நீ கவனித்துக் கொள் என்று, அண்ணன், தம்பியிடம் தருவது போல் தந்து, பெட்டிச் சாவியை இறுகப் பற்றிக் கொள்ளும் சம்பவங்கள் திரைப்படம் முதலாகத் தினசரி நடைமுறை வரை இருந்து வந்திருக்கின்றன.

ராஜினமா என்பதில் இன்னொன்றும் இருக்கிறது. தானாக விலகிக் கொள்வது ஒன்று. மற்றவர் கட்டாயமாகச் சொல்லி விலகுவது மற்றொன்று.

தானாக ராஜினமா செய்வதிலே கூட இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. முதலாவது, தானாக விரும்பி விலகிக் கொள்வது. இரண்டாவது, தன்னை விலக்கி விடுவார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிந்த பின்னர் தாமாக விலகுவதாகக் காட்டிக் கொள்வது. ஒவ்வொன்றிலும் ஏராளமான உதாரணங்களை எல்லா விஷயங்களிலும், எல்லா இடங்களிலும் நாம் காண முடியும்.

கட்சியிலிருந்து ராஜினமாச் செய்வது நமக்கெல்லாம் மிகவும் தெளிவாகத் தெரிந்து போன ஒரு சேதியாகும். கட்சி விரும்பத் தகாததாகச் சென்றுவிடுவதை எண்ணி அதைவிட்டு விலகிக் கொள்வது, தன்னைவிடக் கட்சி சிறந்த கோட்பாடுகளைக் கொண்டிருப்பதால் தன்னால் அதனோடு ஒத்துப்போக முடியாது என்று கருதி விலகிக் கொள்வது - என்ற இரண்டு கோட்பாட்டுக்குள் அனேகமாக எல்லாக் கட்சி ராஜினமாக்களும் அடங்கும்.

இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் கட்சிகளில் இந்த முதலாவது ராஜினமாவை ஏகபோக உரிமைகளாகப் பெற்றிருக்கிற பெருமை, முறையே, காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகளை அவசியம் சார்ந்ததாகும்.

"கம்யூனிஸ்டுக் கட்சி முன்னுக்குப் பின் முரணான வாதங்களைப் பேசும் கட்சி."

"மாஸ்கோவின் கட்டளைகளைச் செயல்படுத்த 'உண்மை விசுவாசி'களாக இங்கே இருப்பவர்கள் அவர்கள்."

"வெறும் கோஷங்களையும், குழப்பங்களையும் மட்டுமே உள்ளடக்கியது கம்யூனிஸ்டுக் கட்சி."

-என்று கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகியோர் ஏராளம். விலகல் திருப்பணியில் இன்றையதினம் காங்கிரசிலிருப்பவர்களே ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள்.

தினசரிப் பத்திரிகைகளின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் 'காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினமா' என்ற தலைப்பில் சேதிகள் வராமல் போவதில்லை.

"மதுரை ஜில்லா போர்டு காங்கிரஸ்கட்சியிலிருந்து ஜில்லா போர்டு தலைவரோடு 24 பேர் ராஜினமா.'

"நாகூர் காங்கிரஸ் தலைவர் ராஜினமா."

"சங்கரன் கோவிலில் பலர் ராஜினமாச் செய்யத் தயாராயுள்ளனர்."

இவை மட்டுமல்லாமல், ஊட்டி, திண்டிவனம், பஞ்சப்பட்டி, ராசிபுரம் போன்ற இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கூட விலகியிருக்கிறார்கள்.

நம்முடைய 'விளையாட்டு மந்திரி' **இராமநாதபுரம் ராஜா**வும் கூடக் காங்கிரசிலிருந்து விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

பீகார் மாநிலத்தில் நீர்ப்பாசன இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சர் **ராம்சாரிதார்சிங்** என்பவர் பதவியையும், காங்கிரசையும் விட்டு ராஜினமாச் செய்துள்ளார்.

இந்த ராஜினமாப் பட்டியல் இன்னும் எவ்வளவு தூரம் நீளும் என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்றாகும். ★

கல்வி நிலை!

இந்திய அரசியல் சட்டத்தின் 45-வது விதிப்படி 1960-ஆம் ஆண்டுக்குள் ஐந்து முதல் பதினுன்கு வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய, இலவசக் கல்வி அளிக்கும் நிலைக்கு இந்தியத் துணைக் கண்டம் வர வேண்டும்.

சென்னை மாநில சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட கல்வி வெள்ளையறிக்கைக் கமிட்டி இதுபற்றி அபிப்பிராயங் கூறுகையில், இப்போது செலவிடப்படும் முறையில் செகண்டரி, உயர்தரக் கல்விக்கு என ஒதுக்கப்படும் முழுத் தொகையும் இதற்கென்றே; ஒதுக்கினுலும் இந்த இலட்சியத்தை யடைவதென்பது இயலாத காரியம் என்று கூறியிருக்கின்றனர்.

கல்வித் துறையை நோக்கிஞல் சோகக் கதைகள் வழி நெடுகக் காணப்படுகின்றன.

ஆறு முதல் பதினென்று வயதுக்குள் இருக்கும் குழந்தைகளில் 40 சதவீதம் பிள்ளைகளுக்கே கல்வி அளிக்கப்படுகின்றது. பதினென்று வயதிலிருந்து பதினேழு வயது வரையுள்ளவர்களில் 10 சதவீதம் பேரே கல்வி பெறுகின்றனர். பதினேழு வயதிலிருந்து இருபத்து மூன்று வயதிற்குள் இருக்கும் இளைஞர்களில் 9 சத வீதமே கல்வி பெறுகின்றனர்.

மேற்சொன்னபடி கல்வி பெறும் குறைவான பிள்ளைகளும், இதுபோது பெற்றுவரும் கல்வியிஞல் பயனெதும் அடைவதில்லை. இன்றைய கல்வி, பிள்ளைகளை குமாஸ்தா வேலைக்கன்றி வேறெதற்கும் தகுதியுள்ளதாக்க வில்லை.

குறைந்த சதவீத பிள்ளைகளுக்கே கல்வி அளித்தல், பயனற்ற முறையில் கல்வி அளித்தல் ஆகிய இந்த இரண்டு குறைகளிலிருந்தும் இளைஞர்கள் காப்பாற்றப்பட வேண்டியது முறை—நியாயம். இன்றைய கல்வி முறையின் நோக்கம், அமைப்பு ஆகியவற்றை நோக்கிஞல் திமைகள் களைந்தெடுக்கப்படுவதற்கு விமோசனம் கிடைக்கும்.

ஆரம்பப் பள்ளியில் எண்ணும், எழுத்தும் கற்பிக்கப்பட்டு, உயர்நிலைப்பள்ளியில் வேற்று மொழியில் விஞ்ஞானக் கல்வியின் பல்வேறு பட்ட பிரிவின் ஆரம்பக் கல்வியும் போதிக்கப்பட்டு, கல்லூரிப் படிப்புக்குத் தகுதியுள்ளவர்களாக மாணவர்களைத் தயார் செய்வதே கல்விக் கொள்கையின் முதற்படியாக இருக்கின்றது. கல்லூரி நிலையில் மாணவர்களைக் கலை வல்லுனர்களாக ஆக்குவதே இலட்சியமாக இருக்கின்றது. இது ஒரு தேசத்தின் கல்விக் கொள்கையின் சரியான இலட்சியத்தின் ஒரு பகுதியேயன்றி முழுமையுமல்ல. இந்த ஒரு பகுதிக்காகவே மாணவர்களைத் தயார் செய்வது என்று ஒரு நாடு முடிவு செய்தால், அது அந்த நாட்டின் மாணவர்களைத் தூக்குமேடைக்கு அனுப்புவதற்கு ஒப்பாகும். ஏனென்ருல், உயிருள்ள ஒரு கல்விக் கொள்கை ஒரு இருமுனை இலட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது, கல்வி என்பது மக்கள் வாழவும், வளரவும் என்றிருக்க வேண்டும்.

வாழ்வதற்குக் கல்வி என்ருல் தாய்மொழிப் பயிற்சி, மனிதனுள்ளே உறைந்து கிடக்கும் ஆற்றலை அறிந்து அதை வளர்க்கப் பயிற்சி, உண்ணும் உணவைச் சம்பாதிக்க ஒரு தொழிற் பயிற்சி—இவற்றை யளித்தலாகும். **வளர்வதற்குக்** கல்வி என்ருல், உலகெங்கும் மக்கள் இயற்கையைப் பற்றி ஆய்விஞலும், விடாமுயற்சியிஞலும் கண்டு பிடிக்கப்பட்ட பல்வேறு உண்மைகளைத் திரட்டி அவற்றின் பேதத் தொடர்புகளைக் கணக்கிட்டு, அதனுல் ஏற்படும் விளைவை மனித வாழ்விற்குப் பயன் படுத்தப் பயிற்சி யளித்தலாகும்.

நமது கல்வியின் இலட்சியத்தில் வாழ்வதற்குக் கல்வி என்பது இல்லவே யில்லை; வளர்வதற்குக் கல்வி என்பது தேய்ந்த உருவத்திலிருக்கின்றது. நம்முடைய கல்வித் திட்டத்தைச் சீர்படுத்துவது என்ருல் முன்னையதைச் சேர்த்து பின்னையதை முழுமையுடையதாக்க வேண்டும்.

இந்தச் சீர்திருத்தத்தைச் செய்வதற்குப் பதிலாக அரசாள்வோர், தெளிவான சிந்தனை இல்லாததும், வடவர் ஆதிக்கம் என்றும் நிலைத்து நிற்கவேண்டும் என்ற வெறியிஞலும் பல பிற்போக்கான திட்டங்களைக் கொண்டு வருகின்ருர்கள்.

முதலாவதாக இந்திய அரசினரின் இந்திக் கொள்கையாகும். முதலமைச்சர் நேரு அவர்களின் வார்த்தைகளில் கூற வேண்டுமாஞல் அதுபற்றி அவர்கள் ஒருவித "வழவழா" கொள்கையைக் கொண்டிருக்கின்றனர். என்னுடைய அண்ணன் வார்த்தைகளில் கூறவேண்டு மென்ருல் "தாளமுத்து நடராசன் உயிர் குடித்ததோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், கட்டாய இந்தி மடிந்தது என்று திட்டவட்டமாகக் கொள்ளலாம்." ஆனுல், அது இஷ்டபாடம் என்னும் போர்வையில் தொல்லை கொடுக்கின்றது.

அடுத்து, ஆச்சாரியார் கொண்டு வந்த ஆரம்பக்கல்வித் திட்டத்தைக் குறிக்கலாம். "கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே" என்ற புரட்சிக்கவியின் வாக்குப்படி தமிழகம் வீறிட்டெழ, ஆச்சாரியாருடன் அவர் திட்டமும் 'தப்பினேம் பிழைத்தோம்' என்று ஓடியது.

இப்போது "ஆதாரக் கல்வி" என்ற திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கின்ருர்கள். இது உடலுழைப்பு வேலையைச் செய்துகொண்டே மாணவன் கல்வியைப் பயிலுவது என்ற அடிப்படையில் உருவானது. இந்தக் காட்டுமிராண்டித் திட்டமும் ஆச்சாரியாரின் திட்டத்தை ஒத்ததே!

பதினுன்கு வயதுக்குட்பட்ட எல்லோருக்கும் கட்டாயக் கல்வியளிக்கத் தேவைப்படும் பணம் ஆண்டு ஒன்றுக்கு 800 கோடியாகும். ஆனுல் இந்திய சர்க்கார் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இந்த ஐந்தாண்டுக் காலத்திற்கும் சேர்த்துச் செலவழிக்க விருக்கும் தொகை 100 கோடியாகும்.

இன்றைய கல்விக் கட்டுக்கோப்பின்படி எட்டாவது அல்லது பத்தாவது வயதில் பள்ளி விட்டுச் செல்லும் மாணவன், பின்னர் ஏழ்மை நீங்கி பன்னிரெண்டு, பதினுன்கு வயதில் மீண்டும் கல்வியைத் தொடருவதற்கு வசதி யில்லை—இந்த வசதியின்மை ஒழிக்கப்பட வேண்டும்.

அவனவன் அறிவு முதிர்ச்சிக்கும், மனேநிலைக்கும், வயதுக்கும் ஏற்ற வண்ணம் கல்வி தரப்படும் நிலை உருவாஞல்தான் கல்வி-வாழவும், வளரவும் பயன்படும்.

—டி. கே. பொன்னுவேலு

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

சேர்வது அபாயம் என நினைக்கிருர்கள்!

விவசாயிகளை மட்டுமே கட்டியழுவதை விடுத்து, விவசாயத்தைப் பற்றியும் பேச ஆரம்பித்தால், யந்திரக் கலப்பைகள் பற்றிப் பேசவேண்டும். இரசாயன உரத்தைப் பற்றிப் பேச வேண்டும்! அனைத்துக்கும் மேலாக நீர்ப்பாசனத்தைப்பற்றி முனகித் தொலைக்க வேண்டும். இந்த மூன்றிலும் வடவர்தான் ஏகபோக மிராசுகளாக இருக்கிருர்கள் என்பதையும் சொல்லித் தொலைக்க வேண்டும்.

இதைப் பேசிஞல், ஏக இந்தியா தத்துவம் என்னுவது? அது போகட்டும், உரிமைப் பிரச்னைகள் பற்றியாவது கம்யூனிஸ்டுகள் தெளிவாக, ஏதாவது சொல்கிருர்களா?

ஜனநாயக உரிமைகள்பற்றி பிரமாதமாகப் பேசுகிருர்கள். அவர்கள் பேச்சைக் கேட்கும் போது உள்ளபடியே லெனினைத் 'தூக்கில்' தொங்கவிடுகிருர்கள் என்பது தெளிவாக விளங்குகிறது. வெறும் உணர்ச்சிப் பிதற்றல்கள்—உற்சாக வார்த்தைகள்.

காங்கிரஸ் ஏகபோக சர்க்காரை முறியடித்து ஜனநாயகத்தை வலுப்படுத்தப் பலமான எதிர்க்கட்சி வேண்டும் என்று சொல்லும் இதே கம்யூனிஸ்டுகள், தி. மு. கழகம் 150 இடங்களுக்குப் போட்டியிட முடிவெடுத்ததைக் கேலி பேசுகின்றனர். ஆழந் தெரியாமல் அகலக் கால் வைத்துவிட்டதாகக் குற்றஞ் சாட்டுகின்றனர்.

தி. மு. கழகத்தைக் குறை கூற யோக்கியதையற்ற கம்யூனிஸ்டுகளின் குற்றச்சாட்டிற்கு பதில் சொல்லிக் கொண்டிருக்க நேரமும் நினைப்பும் இல்லையென்ருலும், எதிர்க்கட்சியின் அவசியத்தைப் பற்றி வாய்கிழியப் பேசி, தாங்கள்தான் பலமான எதிர்க்கட்சி என்று பீத்திக் கொள்ளும் 'தலைமைக் காம்ரேட்களின்' வார்த்தையை அப்படியே நம்பும் அப்பாவிக் கம்யூனிஸ்ட் தோழர்களுக்குச் சற்று விளங்க வைக்க வேண்டிய பொறுப்பு நம் தலையில் விழுந்திருக்கிறது.

தி. மு. கழகம் மட்டும் இந்தத் தேர்தலிலே கலக்காமல் இருந்திருக்குமாஞல், இந்த நாட்டில் மிகப் பயங்கரமான - உலகத்தையே மிரள வைக்கும் படியான கீழ்த்திசை நாசிக் கட்சியாக காங்கிரஸ் உருவெடுத்திருக்கும்.

தமிழகத்தின் மொத்த ஸ்தானங்கள் 205. இதில் 'மிகப் பெரிய எதிர்க்கட்சியான' கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுவது 55 ஸ்தானங்கள்! மற்றக் கட்சிகள் மிஞ்சிப் போஞல் 25, 30 ஸ்தானங்களுக்கு மேல் நினைத்துப் பார்க்கா. இதில் கம்யூனிஸ்டுகளில் 7, 8 பேரும், மற்ற கட்சிகளில் 5, 6 பேரும் வெற்றி பெற்று வரக்கூடும். (அல்லது அதுவும் இல்லாமல் போகலாம்) சுயேச்சைகள் ஜனநாயக அரசியலில், ஆட்சியைத் திருத்த அவ்வளவாகப் பயன்படமாட்டார்கள். ஆதலால் அவர்கள் கணக்கு நமக்கு அவ்வளவாகத் தேவையில்லை. இந்தக் கணக்கை வைத்துப் பார்த்தால், தேர்தல்முடிந்து முதல் சட்டசபைக் கூட்டம் ஆரம்பாகும்போது 170-க்கு மேல் காங்கிரஸ் அங்கத்தினர்கள் வீற்றிருப்பர். அதற்குப் பிறகு ஜனநாயகமாவது, கத்தரிக்காயாவது?

பலமான 'எதிர்க்கட்சிக்காரர்களும்', ஹங்கேரி நிகழ்ச்சிக்குச் சப்பைக்கட்டுக் கட்டிக் கொண்டிருப்பதிலே காலங் கடத்துவார்கள். அல்லது, இந்திய ஐக்கியத்தைப் பிளவுபட வைக்கமாட்டோம் என்று தொண்டை கிழிய நேருவுக்கு வக்காலத்து வாங்கிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

இதற்கிடையில் காங்கிரஸ் தனது யதேச்சாதிகாரக் கரத்தை மக்கள் குரல்வளையில் அகல வைத்துத் திருகும். விளைவு, ஜனநாயகம் சாகும்! ஹங்கேரி தர்பார் நடக்கும். போலந்துப் பிணங்கள் விழித்தெழுந்து இங்கே அணிவகுப்பு நடத்தும்.

இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்திவிட்டது, தி. மு. கழகம். ஒரு சர்வாதிகார ஸ்தாபனத்திற்கு 150 இடங்களில் கடுமையான எதிர்ப்பு என்பதே, அரசியல் அரிச்சுவடிப்படி, மிகப் பெரிய ஜனநாயகச் சோதனை.

இந்தச் சோதனை எப்படி முடியும் என்பதல்ல, எங்கே முடியும் என்பதை நமது 'காம்ரேட்'கள் மாஸ்கோ சொல்லித் தெரிந்து கொண்டாலும் சரி, மார்ச் மாதத்திற்குப் பிறகு உணர்ந்து கொண்டாலும் சரி! இந்தத் தமிழகம் மிகப் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கித் தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது என்பதை மட்டும் பொதுமக்கள் இப்போது உணர்ந்து கொண்டார்கள் என்பதில் தி. மு. கழகத்திற்கு மெத்தத் திருப்தி.

—மு. சண்முகம்

பிப்ரவரி 10-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை
மாலை 6-மணிக்கு
வேலூர் பாரக்ஸ் மைதானத்தில்
தோழர் மா. பா. சாரதி, எம். சி.
தலைமையில்
கண்ணதாசன்
"காஞ்சி, டில்லி, மாஸ்கோ"
என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.
—தேர்தல் கமிட்டி, வேலூர்.

பாதி பாதி!

காமராசர் - சுப்பிரமணியம் 'சண்டை' தீவிரம்!
—பத்திரிகைச் செய்தி.

இங்காருங்கள்! ஆளுக்கொரு சிலம்பு வைத்துக் கொள்ளுங்கள்.
—ஒரு சிலம்புச் சண்டைக்காரர்.

★

உத்தியோகம்பெற, பட்டப் படிப்புத் தேவையில்லை.
—ராஜேந்திரப் பிரசாத்.

சென்னை மாநில முதலமைச்சரை எண்ணிச் சொல்லுகிறாரோ!
—ஒரு சந்தேகி.

★

அந்நிய முதலாளிகளின் நண்பர் நேரு!
—ஜனசக்தி.

பாவம்! எல்லோரும் ரஷ்ய முதலாளிகளுக்கு நண்பர்களாக இருக்க முடியுமா?
—ஒருவர்.

★

பிரிவினை கோஷம் நாட்டின் முன்னேற்றத்துக்கு இடையூறு.
—பணலி கந்தசாமி.

அதனுல்தான் நாங்கள் ரஷ்யாவுடன் நாட்டைச் சேர்த்துவிட எண்ணுகிறோம்.
—அவர் சொல்லாதது.

★

காஷ்மீரைப் பாதுகாப்போம்!
—ஏ. கே. கோபாலன் முழக்கம்.

முதலில் உங்கள் கட்சியைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
—ஒரு நல்லவர்.

★

அகதிகளுக்குப் பயன்தரும் வேலைகள் தேடிக் கொடுக்கவும், துரிதமாக அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும், வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி கோருகிறது.
—ஜனசக்தி.

நிஜமாகவா! நமக்கும் நல்ல காரியங்களுக்கும் 'ஸ்நானப் ராப்தி' கூட இல்லையே!
—ஒரு 'அண்டர்கிரவுண்ட்'

★

திராவிடநாடு பிரிவினை கோஷத்தைக் கைவிட வேண்டும்.
—வேலூரில் ராமமூர்த்தி.

வேலூரில் ஒரு அதிசயப் பிறவி.
—பத்திரிகைச் செய்தி.

★

அகில உலக செவிடர்கள் மகாநாடு அடுத்த ஆண்டில் நடைபெற இருக்கிறது.
—பத்திரிகைச் செய்தி.

நமது சென்னை மாநில அமைச்சர்களும் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
—வராத செய்தி.

★

இந்தோனேஷியாவில், தேசவிரோதிகளின்மீது யுத்தப் பிரகடனம்.
—பத்திரிகைச் செய்தி.

இந்தோனேஷியாவில் தானே! இந்தியாவில் இல்லையே! அப்பாடா!
—ஒரு காம்ரேட்.

★

எதிர்க் கட்சிகளில் சிறந்த கட்சியாக இருந்திருக்கிறோம்; இருப்போம்.
—ஜீவானந்தம்.

பொய் சொன்னுலும் பொருந்தச் சொல்லவேண்டும்.
—மெய்விரும்பி.

★

தங்கவயலில் 12,000 பேர் ஸ்ட்ரைக்!
—பத்திரிகைச் செய்தி.

தங்கவயலென்ன! தரிசு வயலாக இருந்தாலும் ஸ்ட்ரைக் செய்வோம்.
—ஒரு காம்ரேட்.

★

கம்யூனிஸ்டுக் கட்சியில் ஆயிரக்கணக்கில் சேருகின்றனர்.
—அங்கேரிச் செய்தி.

கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து நாள்தோறும் பலர் வெளியேறுகின்றனர்.
—இந்தியச் செய்தி.

★

தேர்தலில் நிற்க எங்களுக்குப் பெருமையும் உரிமையும் உண்டு.
—ஜீவானந்தம்.

இராமாயணத்தையே பிரச்சாரம் செய்யும் உரிமை உங்களுக்கு இருக்கும்போது இது என்ன பெரிய காரியமா?
—ஒரு அனுதாபி.

ஓவியத்தின் உயர்வும், சிற்பத்தின் சிறப்பும்
இணைந்த அற்புதம் புகைப்படம்!

புகைப்படம் எடுக்கும் கலைக்குப்
புகழ் வாய்ந்த இடம்

அழகப்பா ஸ்டுடியோ,

கீழராஜ வீதி : : புதுக்கோட்டை.

போன் No- 226.

ஷேக் ஷூ மார்ட்,

பழனி.

கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மிகச் சிறந்த மிதியடிகளும், ஷூஸ்களும், கவர்ச்சியூட்டும் டிசைன்களில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

பிளக்ஸ் & பாட்டா ஏஜண்ட்
உரிமையாளர்.

ராம் ரேடியோ சர்வீஸ்
டீலர்ஸ் அண்ட் இஞ்சினீயர்ஸ்,
புதுக்கோட்டை

PHILIPS

பிலிப்ஸ்

- ரேடியோ
- ஒலிபெருக்கிக் கருவி
- இன்பிராபில் லாம்ப்
- பிலி ஷேவிங் செட்

முதலியவைகள் கிடைக்கும்.

★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்வீஸ் செய்து தரப்படும்.

— விவரங்களுக்கு: —
ராம் ரேடியோ சர்வீஸ்
தபால் பெட்டி நெம்பர் 2.
கீழராஜ வீதி : : புதுக்கோட்டை

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி
சித்த வைத்தியசாலை.
57 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானுல் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனும்.
பிரதம வைத்தியர் and மானேஜர்:—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமணிய ஓம்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை,
தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. (S.I.)

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு